# ராஜபக்ச குடும்பம் பொருளாதாரப் பயங்கரவாதிகள்! ஜனாதிபதியின் நிழலில் ஒமிந்துகொண்டு சுகபோகம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு



யுத்த வெற்றியை காரணம் காட்டி ஆட்சிக்கு வந்த ராஜபக்ச குடும்பம் பொருளாதார பயங்கரவாதிகளாக செயற்பட்டுவருவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

ஹொரவ்பதானையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்த வெற்றியை காரணம் காட்டியே சிங்கள மக்களின் வாக்குகளை பெற்று ராஜபக்ச குடும்பம் ஆட்சிக்கு வந்தது. இதன் பின்னர் அவர்கள் பொருளாதாரப் பயங்கரவாதிகளாக செயற்பட்டு நாட்டை அழித்தனர்.

ஆனால், இன்று பயங்கரவாதிகளை பாதுகாக்கும் ஜனாதிபதியின் நிழலில் ஒழிந்து கொண்டு ராஜபக்ச குடும்பம் சுகபோகங்களை அனுபவித்து வருரகின்றனர். மல உரங்களை கொண்டு வந்து விவசாயத்தை அழித்ததோடு அதிக விலைக்கு நனோ உரங்களை இறக்குமதி செய்தும் விவசாயத்தை நிர்மூலமாக்கினர்.

எனவே, இந்த திருட்டு கும்பலை சட்டத்தின் முன் நிறுத்தி, திருடப்பட்ட பணத்தை மீண்டும் எமது நாட்டிற்கு நாம் கொண்டு வருவோம்.

தற்போதைய ரணில் ராஜபக்ச கூட்டணி அரசாங்கத்தின் ஊடாக விவசாயிகள், மீனவர்கள், ஏழைகள், தொழிலாளர்கள், நடுத்தர வர்க்கத்தினர், அரச ஊழியர்கள், தொழில் வல்லுநர்கள் என சகல தரப்பினரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்களை மீட்டு, அனைவருக்கும் சுபீட்சத்தை ஏற்படுத்தும் பொது மக்கள் யுகத்தை உருவாக்கத் தயாராக இருக்கின்றோம், என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (04)

# மாலைக்கதிர்

Maalaikkathir






சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 10 புதன்கிழமை 24.01.2024 கதிர் 164

## நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டம்



அரசால் முன்வைக்கப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்துக்கு எதிராக இன்று காலை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்பாக யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனநாயகத்தை அச்சுறுத்தாதே, நிகழ்நிலை காப்புச் சட்டத்தை மீளப்பெறு, ஊடகங்களை, சமூக ஊடகங்களை நசுக்கும் நிகழ்நிலை காப்புச் சட்டத்தை மீளப்பெறு போன்ற பல கோரிக்கைகள் போராட்டக்காரர்களால் வலியுறுத்தப்பட்டது.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் நாளை போராட்டம்

ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் நாளை போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக நாளை மாலை 4 மணிக்குப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தென்னிலங்கை ஊடக அமைப்புக்களின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்படவுள்ள இந்தப் போராட்டதில் அனைத்துத் தரப்பினரையும் அணிதிரளுமாறு யாழ். ஊடக அமையம் கோரியுள்ளது. (அ)

## ஜனவரியில் பணவீக்கம் 7 சதவீதமாக அதிகரிக்கும்

### மத்திய வங்கி ஆளுநர்



இந்த மாதத்தில் பணவீக்கம் சுமார் 7 சதவீதமாக அதிகரிக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வற் வரி அதிகரிப்பு மற்றும் பாதகமான காலநிலையினால் விநியோகத் துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் காரணமாகவே ஜனவரி மாதத்தில் பணவீக்கம் உயரும் என மத்திய வங்கியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார்.

தற்காலிகமாக ஏற்பட்ட காலநிலை சீரின்மை தற்போது சீராகி வருவதால் பணவீக்க 2➤

## 7 மீனவர்களுக்கு மரண தண்டனை கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்தது

மீன்பிடிக்கப்பலைக் கடத்தி மூன்று மீனவர்களை கொலை செய்த வழக்கில் 7 மீனவர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு ஒக்டோபர் 15ஆம் திகதி இலங்கைக் கடற்பகுதியில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டவர்களை ஏற்றிச் சென்ற ‘தேஜான்’ என்ற மீன்பிடிக் கப்பல் கடத்தப்பட்டு மூன்று மீனவர்கள் கொல்லப்பட்டதுடன் மேலும் பல மீனவர்கள் படுகாயமடைந்தனர். 2➤

## சீனி வரி மோசடி செய்தோரிடமிருந்து 31 கோடி ரூபாவை மீட்டுள்ளோம்!

### நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

சீனி வரி மோசடி குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்களம் நிறைவு செய்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

விசாரணையின் கோப்புகள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றுக்கான பதில்கள் தற்போது கிடைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மோசடி தொடர்பாக வழக்குத் தொடர்வதற்கான ஆலோசனையைப் பெறுவதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 12 நிறுவனங்களில் தடயவியல் தணிக்கையை நடத்தி 6 நிறுவனங்களில் இருந்து பெற்ற இலாபத்தில் 31 கோடி ரூபாவை மீட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். 2➤

## கிளிநொச்சி விபத்தில் பெண்ணொருவர் பலி 8 பேர் படுகாயம் எட்டு மாடுகளும் உயிரிழப்பு



யாழ்ப்பாணம் – கண்டி நெடுஞ்சாலையில் கிளிநொச்சி பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 8 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், விபத்தில் சிக்கி 8 மாடுகளும் உயிரிழந்துள்ளன.

வவுனியாவைச் சேர்ந்த திருமணி திருச்செல்வம்(வயது 50) என்ற பெண்ணே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்தும், யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ஹயஸ் வானும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வீதிக்கு குறுக்கே நின்ற மாடுகளே விபத்துக்குக் காரணம் என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கண்பாதிப்புகள் தொடர்பான சிறப்பு அமர்வு ஜனவரி 28 இல் கொழும்பில் நடைபெறவுள்ளது

சிலோன் ஐ கேயார் ஒப்டோமெட்ரிஸ்ட்ஸ் எஸோஷியேஷன் (Ceylon Eyecare Optometrists Association) ஏற்பாடு செய்துள்ள கண்பாதிப்புகள் தொடர்பான சிறப்பு அமர்வு ஜனவரி 28 ஆம் திகதி ஞாயிறன்று காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை கொழும்பு 'சினமன் லேக்' ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

கண் பார்வையை இழக்கச் செய்யும் கண் நோய்கள் மற்றும் பார்வை குறைபாடுகள் தொடர்பில் இங்கு விவாதிக்கப்படவுள்ளது. மேலும், இலங்கையில் கண் சிகிச்சையின் தரம், விசேட கண்மருத்துவ நிபுணர்கள் என்பவர் யார்? அவர்களால் என்ன செய்ய முடியும்? ஆகியன தொடர்பில் இங்கு சிறப்பு கவனம் செலுத்தப் படவுள்ளது.

இந்த அமர்வுக்கு இலங்கையின் முன்னணி கண் மருத்துவ நிபுணர்கள், பேராசிரியர்கள் மற்றும் உலக அங்கீகாரம் பெற்ற கண் மருத்துவ நிபுணர்கள் கவுன்ஸிலின் அறிஞர்கள் என பலரும் இதில் பங்கேற்கவுள்ளனர். (ரெத-56)

# ரின் இலக்கத்தைப்பெற புதிய நடைமுறை வரும்!

ரின் இலக்கத்தை இணைய வழியில் பெறுவதை இலகுப்படுத்துவதை நோக்கமாக கொண்டு பொதுமக்களின் தரவுகளை பேணும் அரச நிறுவனங்களினூடக இலக்கங்களை வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அந்த நிறுவனங்களிடம் இருந்து தகவல்களைப் பெற்று அவற்றைப் பதிவு செய்ததன் பின்னர், இலக்கம் ஒன்றை வழங்க எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சட்டச் சிக்கல்கள் இல்லாத நிறுவனங்களில் இருந்து இந்த தகவல்கள் பெறப்படும் என்றும் ராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (04)

# இனங்காணப்படாத புழுக்களினால் நெற்பயிர் வெண்மையாகி அழியும்!

பொலன்னறுவை மாவட்டத்தின் மின்னேரிய ரத்மலை பிரதேசத்தில் பயிரிடப்பட்ட வயல்களில் இனங்காணப்படாத ஒருவகை புழுக்கள் பரவியதன் காரணமாக பல நெற்செய்கைகள் வெண்மை நிறமாகி அழிந்து போயுள்ளமையினால் அப்பகுதி விவாசாயிகள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரியவருகின்றது.

இப் பருவத்தில் இரத்மலைக் குளத்தினை அடியொட்டி சுமார் 90 விவசாயிகள் 220 ஏக்கர் காணியில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொண்டுள்ளதுடன், இந்த ஆக்கிரமிப்பு வகைப் புழுக்கள் அனைத்து பயிர்ச்செய்கைக் காணிகளிலும் பரவி நெற்பயிர்கள் பெருமளவில் சேதமடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இன்னமும் இனங்காணப்படாத கம்பளிப்பூச்சி வகையையொத்த இந்த புழுக்கள் பயிர்களின் இலைகளில் தங்கி இலைகளிலுள்ள சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் வெண்மையாகி நெற்பயிர்கள் அழிவடைந்து வருவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்தப் புழுக்களினால் ஏற்பட்ட அழிவினால் போதிய அறுவடையை எதிர்பார்க்க முடியாது எனவும் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ரெத-55)

## சீனி வரி மோசடி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனி வரி மோசடி தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே சியம்பலாபிட்டிய இதனைத் தெரிவித்தார். (04)

## 7 மீனவர்களுக்கு மரண தண்டனை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த வழக்கு இன்று கொழும்பு உயர் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்ட போது நீதிபதி ஆதித்ய பட்டபாண்டிகே 7 மீனவர்களுக்கு உரிய தீர்ப்பு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

வழக்கின் பத்தாவது பிரதிவாதியாக குறிப்பிடப் பட்டிருந்த நபரை அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்குமாறும் உயர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கு மேலதிகமாக, ஏனைய ஆறு குற்றச்சாட்டுகளுக்கும் பிரதிவாதிகளுக்கு 29 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்த நீதிபதி, தலா 2,008,500 ரூபா அபராதம் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

மரண தண்டனைக்கு மேலதிகமாக விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைகளையும் ஒரே நேரத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

11 பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வழக்குகளின் விசாரணைகள் இடம் பெற்றிருந்த காலப்பகுதியில் இறந்துவிட்டதால், 8 பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் நடத்தப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

## ஜனவரியில் பணவீக்கம் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிப்பு தற்காலிக அதிகரிப்பே எனவும் நீண்ட கால நோக்கிலான மத்திய வங்கியின் இலக்கை 5 சதவீத அளவில் (அதாவது 4-6 சதவீத வரம்பில்) தக்கவைத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். கடந்த டிசம்பரில், தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டின்படி, பணவீக்கம் 4.2 சதவீதமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெத-54)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# நெடுந்தீவில் வாசிப்பு ஊக்குவிப்பு நிகழ்வு




நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலைய இரகுபதி நூலகத்தின் ஏற்பாட்டில் வாழ்விற்கான பேரொளி வாசிப்பு எனும் எண்ணக் கருவில் பாடசாலை மாணவர்களின் நூலக பாவனை ஊக்குவிப்பு மற்றும் திறன் சார் விருத்தி செயற்பாடுகள் கடந்த நவம்பர் மாதம் முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த செயற்பாட்டின் தொடர்ச்சியாக வாசிப்பு ஊக்குவிப்பு நிகழ்வின் மூன்றாவது அமர்வு நாளை 25 ஆம் திகதி வியாழன் அன்று காலை 10 மணிக்கு நூலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது. அமர்வின் வளவாளராக ஆசிரியர் செல்வநாதன் வினோத்குமார் கலந்துகொள்ளவுள்ளார்.

வாழ்விற்கான பேரொளி வாசிப்பு செயற்றிட்டத்திற்கான அனுசரணையினை வள்ளிதமிழ் அமுதம் குழுவினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச அல்குர்ஆன் மனனப் போட்டியில் புத்தளம் பங்குபற்றாளருக்கு முதலாமிடம்




(கற்பிட்டி செய்தியாளர் சியாஜ்)

பாகிஸ்தானில் நடைபெற்ற சர்வதேச அல்குர்ஆன் மனனப் போட்டியில் புத்தளம் மதுரங்குளி - கனமூலையைச் சேர்ந்த அஷ்ஷெய்க் - அல் ஹாபிழ் நஸ்மிர் நஸ்ருதீன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் தனத ஆரம்பக் கல்வியை கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 7 வரை கல்வி கற்று பின்னர் பாணந்துரை தீனியா அரபுக் கல்லூரியில் அல்ஹாபிழ் மற்றும் அல் ஆலிம் பட்டத்தை பெற்றுக் கொண்டார்.

இவர் தனது அல்குர்ஆன் மேற்படிப்புக்காக பாகிஸ்தான் ஜாமியா பின்னூரியாவில் கல்வி கற்றுக் கொண்டிருந்த அவர் அங்கு இடம்பெற்ற சர்வதேச அல்குர்ஆன் மனனப்போட்டியில் கலந்து கொண்டு முதலாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கழகத்தினால் துவிச்சக்கர வண்டி வாடகை செயலி அறிமுகம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சைக்கிளோட்டிகள் கழகம் ஒழுங்கு செய்திருந்த துவிச்சக்கர வண்டி பாவனையினை அதிகரிக்கும் வகையில் துவிச்சக்கர வண்டிகளை வாடகைக்கு பெறுவதற்கான கைப்பேசி செயலி அறிமுக விழா கல்லூரி சபாலிங்கம் அரங்கில் இடம்பெற்றது.

வைத்திய கலாநிதி க.காண்டீபன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அங்குரார்ப்பண நிகழ்வை சிறப்பித்திருந்தார்.

இக்கைபேசிச் செயலியினூடாக பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு தேவையான துவிச்சக்கர வண்டிகளை வாடகைக்குப் பதிவு செய்து கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அலுவலகம் பாடசாலையில் திறந்து வைக்கப்பட்டதோடு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.



# மிதி வெடி

*“பொல்லாத சொல்லி மறைந்தொழுகும்*
*பேதைதன் சொல்லாலே*
*தன்னைத் துயர்ப்படுக்கும் -*
*நல்லாய்! மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்*
*நுணலுந்தன் வாயால் கெடும்”*

*என்ன வாத்தியார் கடுமையாய் தத்துவம் பேசிறார் எண்டு தானே நினைக்கிறியள்? இது தத்துவம் இல்லைப் பாருங்கோ.. பழமொழி.*

*நுணல் எண்டது தவளை பாருங்கோ.. தவளை தனக்குத் துணை தேடுறதுக்காக “வாக்கு.. வாக்கெண்டு” கத்த அதைக் கேட்டுப் போட்டுத் தான் பாம்பு போய்த் தவளையை “லபக்” எண்டு அப்புறதாம்... அதைத் தான் தவளைக்குத் தன் வாயால் தான் அழிவு எண்டுறவை.*

*அதைப் போலத் தான் இங்க ஒருத்தர் ரெலிபோஃன் எடுத்து வாயை விட்டு வாங்கிக் கட்டிப் போட்டு இருக்கிறார்.*

*ஆள்- ஒரு ஸ்ரேசன் மாஸ்டர். வவுனியாக்குப் போற வழியில இருக்கிற ஒரு ஸ்ரேசனில இருந்தவர். கூட இருந்தவருக்குக் குழிபறிக்க வெளிக்கிட்டு இப்பக் குழிக்குள்ள கிடக்கிறார்.*

*இரண்டு எஸ். எம் இருந்த ஸ்ரேசனில இவர், தான் மட்டும் தான் “கிங்” ஆக இருக்க வேணும் எண்டு காட்டின தில்லாலங்கடி, கடைசியில இவர் மாட்டி வைச்ச மற்றவருக்கு “சுவீப்” அடிக்க வைச்சுட்டுது பாருங்கோ..!*

*குளத்தில இருந்தவருக்கு இப்பக் குழைக் காட்டுக்கு ரான்ஸ்பஃர்.*

*ரெண்டு கிழமைக் கொருக்கால் வீட்டுக்குப் போய் வந்தவரை, இப்ப வீட்டுக்குப் போய் தினமும் விருந்து தின்ன விட்டிருக்கு. வீட்டுக்குப் பக்கதில வேலை - மூண்டு நேரமும் சுடச் சுடச் சாப்பாடு எண்டு “வேந்தன்” போல ராச வாழ்க்கை வாழுறார் அந்த ரெண்டாவது ஆள்.*

*ஆள் ஒரு வஞ்சகமில்லாத பெடியன். “பேஸ்புக்ல”யும் பிரபலம். கொஞ்சம் அரசியல் ஆர்வமும் வேற. பலதும் பத்தும் கதைக்கிறதில பலே கில்லாடி.*

*ஒன்பது வருசமாத் தலைநகரில இருந்த வரைக்கும் ஒரு பிரச்சினை வரேல்ல. வன்னிப் பக்கத்தில ஒரு ஸ்ரேசனுக்கு மாத்தி விட, இங்க வந்த பெடி நாலு பேருக்கு நல்லது செய்யிறன் எண்டு வெளிக்கிட்டு இப்ப நல்ல படிப்பினை.*

*மாஸ்டர் ஸ்ரேசனுக்கு வந்த நாளில இருந்து ஸ்ரேசனில சும்மா இருக்கேல்ல.. கேப்பாரில்லாமல் கஞ்சலுங் குப்பையுமாக் கிடந்த ஸ்ரேசனை அந்த மாதிரி மாத்தியிருக்குது பெடி.*

*அதுவும் எப்பிடி? அங்கத்தச் சனத்தைப் பிடிச்சு - ஆளும் பேருமாச் சேர்ந்து சிரமதானம் செய்விச்சிருக்கிறார். ரெயில்வே டிபார்ட்மென்றிலேயே ஒரு ஸ்ரேசனிலயும் இப்பிடி ஒரு மாற்றம் இதுவரை நடந்ததில்லையாம்!*

*போன புதுசெண்டதால, புதுத் தடி நல்லாக் கூட்டுது எண்டு மற்றவை “கொமன்ற்”.*

*தான் வேலை செய்யுற சூழலை துப்புரவா வைச்சதோட மட்டுமில்லாமல் தனக்குத் தெரிஞ்சவை, வந்தவை போனவையிட்ட எல்லாம் வாய் விட்டுக் கேட்டு ஸ்ரேசனை ஒரு முன்மாதிரியான ஸ்ரேசனா மாத்தியிருக்கிறார் அந்த “எஸ். எம்”.*

*ரெயிலுக்கு நிக்கிற நேரத்தில எதையாவது வாசியுங்கோ எண்டு ஒரு சின்ன நூலகத்தையும் செட் பண்ணியிருக்கிறார். செய்யிறதெல்லாத்தையும் ஒரு வரி விடாமல் “பேஸ்புக்” ல அப்டேட் பண்ணுவார்..*

*தான் செய்யுறன் எண்டு காட்டுறதை விட, இப்பிடியும் செய்யலாம் எண்டு பெடி குடுத்த அப்டேற்றால ஆளாளுக்கு அதை, இதையெண்டு வாங்கிக் குடுக்க ஸ்ரேசனும், ஸ்ரேசன் மாஸ்டரும் பிரபலமாயிற்றினம்.*

*இது அங்க கூட நிண்ட முதலாமாளுக்குப் பொறுக்கேல்ல. எங்கட ஆக்கள் இன்னும் இப்பிடியே இருக்கிறதுக்கு இது தானே காரணம்?*

*கோபனுக்குக் கோபம் வந்தால்? குளத்தில போட்ட கல்லைப் போல். குட்டையைக் குழப்பப் போய்க் கடைசியில - தானே தனக்கு ஆப்புச் சீவி வைச்சிருகிறார் அந்தக் “கோப” க்கார எஸ்.எம்.*

*நல்லது செய்யுற அந்த எஸ். எம் மை மாட்டி விட வேணும் எண்டு “கோப”க் கார எஸ். எம் - லாச்சிக்குள்ள இருந்த காசில கையை வைச்சிருக்கிறார். ‘கணக்குக் காட்ட வேண்டியவர் கையாடிப் போட்டார்’ எண்டு கணக்காய்வு செய்யிறவைக்கும் தானே போட்டும் குடுத்திருக்கிறார்.*

*கோல் போன கையோட அடுத்த ரெயிலைப் பிடிச்சு வந்திறங்கின “ஒடிற்றீம்” ஒன்றரை மாசமாக ஒண்டும் விடாமல் தேடித் துருவிப் பாத்ததில - மாட்டி விட்டவரே மாட்டுப்பட்டுப் போனாராம் பாருங்கோ..*

*போட்டுக் குடுத்து மாட்டுப்பட வைக்க வெளிக்கிட்டவர் இப்ப அவரைப் போட்டுக் குடுத்த அதே குற்றத்துக்காக அனுராதபுரத்திலயாம் - அப்பப் பாருங்கோவன்!*

*மற்றவனை மாட்ட நினைக்கேக்க அது நம்மளையும் மற்றப் பக்கத்தால மாட்டும் எண்டு யோசிக்க வேணும் தானே?*

*காசில கைவைக்கிறார் எண்டு பொய்ச் சாட்சி சொல்ல வெளிக்கிட்டவர், முந்திக் கைவைச்சதைக் கையும் களவுமாக் காட்டிக் குடுத்த “கணேசன்” கடவுள் தானப்பா. சும்மாவே சொல்லுறது? “கடவுளை நம்பினார் கை விடப்படார்!”*

*ஒண்டு மட்டும் சொல்லுறன் கேளுங்கோ.*

*வேலைக்குப் போனமா.. சம்பளத்தை வாங்கினமா எண்டு இருந்திட்டா ஒரு சோலியும் வராது. அதை விட்டுட்டு ஊரைக் கூட்டுறம். பேரைச் சேர்க்கிறம் எண்டு வெளிக்கிட்டர். தேவையில்லாத தலையிடியள் தானா வரும் பாருங்கோ.*

*ஆனாலும் தர்மம் தலை காக்கும் - தக்க சமயத்தில் உயிர் காக்கும்!*

*-நரமுனி-*

# அமெரிக்காவின் சிகாகோவில் துப்பாக்கிச் சூடு இரு சம்பவங்களில் 7 பேர் பலியானதாக தகவல்



அமெரிக்காவின் சிகாகோ நகரில் இரு வீடுகளில் 7 பேரைச் சுட்டுக் கொன்ற நபர் ஒருவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜோலியட் எனும் பகுதியில் இருக்கும் இரண்டு வீடுகளில் இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் நிகழ்ந்துள்ளது என்றும், ரோமியோ நான்ஸ் என்பவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து ஜோலியட் பொலிஸார் கூறும்போது, “கடந்த ஞாயிற்றுக்கிழமை இங்குள்ள இரண்டு வீடுகளில் துப்பாக்கிச்சூடு சம்பவம் நிகழ்ந்தது. இதில் இறந்தவர்களில் 5 பேரின் உடல்கள் 2212 வெஸ்ட் ஏக்கர் சாலையில் உள்ள ஒரு வீட்டிலும், மற்ற இருவரின் உடல்கள் 2225 வெஸ்ட் ஏக்கர் சாலையில் உள்ள வேறு ஒரு வீட்டிலும் இருந்தும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பங்களுக்கும் 23 வயது ரோமியோ நான்ஸ் என்பவர்தான் காரணம் என்று இதுகுறித்து விசாரணை நடத்தி வரும் அதிகாரிகள் அடையாளம் கண்டனர். இந்த நபருக்கு வில் கவுண்டியில் நடந்த ஒரு துப்பாக்கிச் சூடு மரண வழக்கு மற்றும் ஜோலியட்டில் நடந்த மற்றொரு துப்பாக்கிச் சூடு வழக்கு ஆகியவற்றில் தொடர்பு இருக்கலாம் என்றும் தோன்றுகிறது.

இந்த நிலையில், டெக்சாஸின் நாடாலியா பகுதியில் அங்குள்ள பொலிஸார் ரோமியோ நான்ஸை அடையாளம் கண்டிருக்கிறார்கள். அப்போது அவர்களுக்குள் நடந்த மோதலினைத் தொடர்ந்து நான்ஸ் கைத்துப்பாக்கி ஒன்றால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரியவந்தது. அவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களை அடையாளம் காண்பது மற்றும் அவர்கள் எவ்வாறு இறந்தனர் என்பது குறித்து வில் கவுண்டி அதிகாரிகள் ஆய்வு செய்வார்கள்” எனத் தெரிவித்தனர்.

இதனிடையே, அமெரிக்காவில் நடக்கும் துப்பாக்கிச் சூட்டு வன்முறை குறித்த தகவல்களை சேகரித்து வரும் ஆவணக் காப்பகத்தின் தரவுகள், இந்த ஆண்டின் முதல் மூன்று வாரங்களுக்குள் இதுவரை 875 துப்பாக்கிச் சூட்டு மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கின்றன. (04)

## கனடாவுக்கான மாணவர் விசா காலம் 2 ஆண்டாகக் குறைப்பதாக அறிவிப்பு

கனடாவுக்கு கல்வி பயில வரும் மாணவர்களுக்கு வழங்கப்படும் விசா காலத்தை இரண்டு வருடங்களாக கனடா அரசு குறைத்து புதிய வரம்பு நிர்ணயித்துள்ளது. இதனால், இலங்கை - இந்திய மாணவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட வாய்ப்பு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய கனடா குடியேற்றத் துறை அமைச்சர் மார்க் மில்லர், ”கனடாவுக்கு கல்வி பயில வரும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டு 8 லட்சத்துக் கும் மேற்பட்ட கல்வி விசாக்கள் வழங்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 5.6 லட்சம் மாணவர் விசாக்கள் வழங்கப்பட்டன.

10 ஆண்டுகளுக்கு முன் நாங்கள் ஏற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையைவிட இது மூன்று மடங்கு அதிகம்.

எனவே, கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில், நடப்பாண்டில் 35 சதவீதம் அளவுக்கு மாணவர் விசாக்களை குறைக்க முடிவெடுத்துள்ளோம். இதன்மூலம், நடப்பாண்டில் 3.64 லட்சம் மாணவர் விசாக்கள் மட்டுமே வழங்கப்படும். இந்த வரம்பு இரண்டு ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.

இந்த ஆண்டின் இறுதியில் மறுமதிப்பீடு செய்யப்பட்டு, மாணவர் விசாக்களின் அதிகபட்ச எண்ணிக்கை எவ்வளவு இருக்க வேண்டும் என்பது குறித்த அறிவிப்பு அடுத்த ஆண்டு வெளியிடப்படும்.

கனடாவில் தங்குவதற்கு வீடுகள் கிடைப்பதில் மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். கனடா வரும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்வதே இந்த பிரச்சினைக்குக்காரணம். இதைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது” என தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து கனடா வரும் மாணவர்கள் தங்குவதற்கு பல்வேறு மாகாணங்களில் போதுமான வீடுகள் இல்லை என்பதால், அந்த மாகாணங்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருவதாகவும், அந்த மாகாணங்களின் வலியுறுத்தல் காரணமாகவே கனடா அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டிருப்பதாகவும் அந்நாட்டின் செய்தி நிறுவனம் சிபிசி தெரிவித்துள்ளது.

கனடா அரசு எடுத்துள்ள இந்த முடிவுக்கு மற்றொரு காரணமும் இருக்கிறது என தெரிவித்த மார்க் மில்லர், ”போதுமான அடிப்படை கட்டமைப்புகளைக் கொண்டிருக்காத நூற்றுக்கணக்கான கல்வி நிறுவனங்கள், வெளிநாட்டு மாணவர்களை தங்கள் கல்வி நிறுவனங்களில் சேர்க்கின்றன. தங்கள் கல்வி நிறுவனங்களில் சேர்ந்தால் கனடாவில் உடனடியாக வேலைவாய்ப்பு கிடைக்கும், நிரந்தர கனடா வாசியாக மாற முடியும் என்றெல்லாம் அவை போலியான வாக்குறுதிகளை அளிக்கின்றன. எனவே, இதைக் கட்டுப்படுத்த இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு எந்த ஒரு சர்வதேச மாணவருக்கும் எதிரானது அல்ல” என கூறினார்.

கனடாவின் எதிர்க்கட்சி இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. புதிய ஜனநாயக கட்சியின் தலைவரான ஜென்னி க்வான், ”அதிபர் ஜஸ்டின் ட்ரூடோவின் தவறான நிர்வாகமே இதற்குக் காரணம். சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள விரும்பும் மாணவர்களை தண்டிப்பதைப் போன்ற செயல் இது” என தெரிவித்துள்ளார். (04)

## ருவாண்டாவுக்கு நாடு கடத்துவதற்கு எதிர் தீர்மானம் பிரிட்டன் நாடாளுமன்ற மேலவையில் நிறைவேற்றம்



பிரிட்டனுக்கு உரிய ஆவணங்கள் இல்லாமல் வரும் அகதிகளை ருவாண்டாவுக்கு நாடு கடத்துவதற்கான திட்டத்தை அமல்படுத்த வேண்டாம் என்று பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான அரசை வலியுறுத்தும் தீர்மானம் அந்த நாட்டு நாடாளுமன்ற மேலவையில் நிறைவேற்றப்பட்டது.

பிரபுக்கள் சபையில் நடைபெற்ற இதற்கான வாக்கெடுப்பில், தீர்மானத்துக்கு ஆதரவாக 214 பேரும், எதிராக 171 பேரும் வாக்களித்தனர்.

இந்தத் தீர்மானத்தால் அரசின் இந்த முயற்சிக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் இல்லை. இருந்தாலும், அந்தத் திட்டத்துக்கு எம்.பி.க்களிடையே அதிகரித்து வரும் எதிர்ப்பை இந்தத் தீர்மானம் வெளிப்படுத்துவதாகக் கூறப்படுகிறது. (04)

## சீன ஆய்வுக் கப்பலை தரித்திட மாலைதீவு அனுமதி வழங்கியது



தமது துறைமுகத்தில் சீன ஆய்வுக் கப்பலை நிறுத்திவைத்திட மாலைதீவு அனுமதி அளித்துள்ளது.

இந்தியா-மாலைதீவு நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் உருவாகியுள்ள சூழலில், இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மாலைதீவு அதிபராகப் பதவியேற்றுள்ள முகமது மூயிஸ் சீன ஆதரவாளராகக் கருதப்படுகிறார். இந்நிலையில், மாலைதீவுக்கு மருத்துவ உதவி மற்றும் கடல் கண்காணிப்புக்காக அதிநவீன இலகுரக ஹெலிகொப்டர்கள், டார்னியர் சிறிய ரக விமானம் ஆகியவற்றை இந்தியா வழங்கியுள்ளது. அவற்றை அந்நாட்டில் பராமரித்து, இயக்குவது உள்ளிட்ட பணிகளில் இந்திய ராணுவ வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அந்த வீரர்களை மார்ச் 15 க்குள் திரும்பப் பெறுமாறு அதிபர் மூயிஸ் இந்திய அரசிடம் அண்மையில் வலியுறுத்தினார். இதனால் மாலைதீவு, இந்தியா நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், மாலைதீவு வெளியுறவு அமைச்சகம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில், சுழற்சி முறையில் பணியாளர்களைப் பணியமர்த்தவும், சரக்குகளை நிரப்பவும் சியாங் யாங் ஹோங் 3 என்ற சீன கப்பலை மாலைதீவில் நிறுத்த அனுமதி கோரப்பட்டது. சீன அரசு விடுத்த கோரிக்கையை ஏற்று, அந்தக் கப்பலை நிறுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அந்த ஆய்வுக் கப்பல் மாலைதீவு கடற்பகுதியில் எந்த ஆய்விலும் ஈடுபடாது என்று தெரிவிக்கப்பட்டது.

மாலைதீவில் உள்ள மாலி துறைமுகத்தில் பெப்ரவரி 8 ஆம் திகதி, அந்த சீனக் கப்பல் நிறுத்தப்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. (04)



# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு



(நூருல் ஹுதா உமர்)

இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழக பல்துறை ஆராய்ச்சிக்கான நிலையம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் அத்துடன் இந்தியாவின் ஈ.எஸ்.என் பதிப்பகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த “நாளைய சவால்களுக்கான நிலைத்திருக்கும் தன்மை, புத்தாக்கம், இடைநிலை ஆராய்ச்சி” என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு கிழக்குப் பல்கலைக் கழக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் ஆரம்ப உரையாற்றிய இம்மாநாட்டில், தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவரும் றுகுணு பல்கலைக்கழக பயிர் விஞ்ஞானத்துறையைச் சேர்ந்த வாழ்நாள் பேராசியருமான ரஞ்சித் சேனாரத்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பிரதம அதிதியின் உரையின்போது,

“நாட்டின் பிரச்சினைகளுக்கு அறிவியல் மூலம் தீர்வு காணப்படும். எனவே, தேசிய விஞ்ஞான மன்றமும், இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கமும் பல்துறை துறையில் உள்ள கல்வியாளர்களுடன் கைகோர்த்து அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப் பதற்குத் தயாராக உள்ளதாக” குறிப்பிட்டார்.

கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் ஏ.ஜி.ஜோன் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இந் தியாவின் ஈ.எஸ்.என் பதிப்பகத்தின் நிறுவுனரும் அதன் தவிசாளருமான கலாநிதி. ஜே.பானுசந்தர், மட்டக்களப்பு அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி. ஜே.ஜே.முரளிதரன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

மாநாட்டின் முக்கிய பேச்சாளர்களாக தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உதவிப் பேராசியர். கலாநிதி வி.சர்மிளா நிகழ்வில் கலந்து கொண்டதுடன், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இயற்கை மருத்துவ நிபுணரும் ஊட்டச்சத்து தொடர்பான அறிவுரையாளருமான வைத்தியர் நித்தி கனரத்னம் நிகழ்நிலை ஊடாகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அத்துடன் நிகழ்வின் பங்காளரான தமிழ்நாடு ஆசிரி யர் கல்வியியல் பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் நாகா சுப்ரமணி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இம்மாநாட்டுக்காக இலங்கை, இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளில் இருந்து 162 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்துடன், அவற்றில் 138 கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாநாட்டு குழு செயலாளரும், பல்துறை ஆராய்ச்சிக் கான நிலையப் பணிப்பாளருமான கலாநிதி பி.றொட்னி பெனான்டோ நிகழ்வுகளை நெறிப்படுத்தியிருந்தார்.

# ஜெயிக்கா திட்டத்தின் கீழ் மகளிர் சங்கங்களை வலுப்படுத்தும் பயிற்சி அட்டாளைச்சேனையில்



(எம்.எப்.நவாஸ்)

ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா திட்டத்துடன் இணைந்து சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் மூலம் பதிவு செய்யப்பட்ட மகளிர் சங்கங்களை வலுப்ப டுத்து வதற்கான பயிற்சி முன்னெடுக்கப்பட்டு வருகின் றது.

இதன் அடிப்படையில் இரண்டாண்டு திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடு தொடர்பாக இன்று அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் தெளிவுபடுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

உதவி பிரதேச செயலாளர் திருமதி நஹீஜா முசா பிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், ஜெய்க்கா திட்டத்தின் பால் நிலை சமத்துவ நிபுணர் ஜெஸாக்கா நகசிமா, சிறுவர் மகளிர் விவகார அமைச்சின் திட்ட உத்தியோகத்தர் பிரசன்னா அட்டாளைச்சேனை மகளிர் அபிவிருத்திக்கான உளவளத் துணை உதவி யாளர் ஹப்றத் உதவியாளர் ளுஆயுளு. பர்ஹானா, அக்கரைப்பற்று மகளிர் அபிவிருத்தி கள உதவியாளர் AR.றாசிதா சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர் AM.கஸ்பியா பீவி, கலாசார உத்தியோகத்தர் ஜஃபர் உட்பட சங்கங்களின் நிருவாக உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தம்பலகாமத்தில் தைப்பொங்கல் விழா



(ஹஸ்பர் ஏ.எச்.)

தம்பலகாமம் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த பொங்கல் விழாவானது தம்பலகாமம் பிரதேச செயலா ளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நேற்று (23) பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் வகையில் விசேட பூசையும் இதன்போது நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன் உட்பட பதவி நிலை உத்தியோகத்தர்கள், சக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்ட னர்.



# நல்லூரில் நெற்புதிர் அறுவடை




நல்லூர் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை நிகழ்வு இன்று காலை இடம்பெற்றது.

# ஐசிபிரி கம்பஸ் முன்னெடுத்திருந்த டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடை!




யாழ்ப்பாணம் ஐசிபிரி கம்பஸ் கல்வியகத்தில் வியாபார முகாமைத்துவத் துறையில் கல்வி பயில்கின்ற மாணவர்கள் டெங்கு விழிப்புணர்வு நடைபவனியினை சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து இன்று முன்னெடுத்திருந்தனர்.

டெங்குப் பாதிப்பும் அதனாலான மரணங்களும் அதிகரித்து வரும் காலகட்டத்தில், டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு எமது சுற்றுச் சூழலை சுத்தமாகப் பேணுவதே பொருத்தமான வழி என்பதனை டெங்கு என்னும் அரக்கனை எல்லோரும் ஒன்றுகூடி அழிப்போம் என்ற தொனிப்போருளின் கருத்தாக்கத்தோடு - மக்களுக்கு உணர்த்தும் விதமாக இந்த நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ் நிகழ்வில் ஐசிபிரி கம்பஸ் நிறுவன ஊழியர்களும் மாணவர்களும் பெருந்திரளாக பொதுமக்களும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






# கணவரையும் மகனையும் வெளிநாட்டுக்கு வழியனுப்பி திரும்பிய தாய் விபத்தில் பலி!

கிளிநொச்சி ஏ. 9 வீதியின் ஆனையிறவு அன்மித்த பகுதியில் இன்று அதிகாலை 4.45 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் எட்டு பேர் காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வீதியில் சென்று கொண்டிருந்த எருமை மாடுகளுடன் மோதி, வெளிநாட்டுக்கு திரும்பிய கணவரையும் மகனையும் விமான நிலையத்தில் வழியனுப்பி விட்டு வந்த பெண் பயணம் செய்த ஹயஸ் வானிலும் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது ஹயஸ் வாகனத்தில் பயணித்த கணவரையும் மகனையும் விமான நிலையத்தில் வழியனுப்பி வீடு திரும்பி வந்தபோது ஆனையிறவை அண்மித்த பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில், சம்பவ இடத்திலேயே பாசையூர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மார்க் வெஸ்லி அலன் கத்தரின் என்ற மூன்று பிள்ளைகளின் தாய் உயிரிழந்துள்ளதுடன், இரண்டு சிறுவர்கள் உட்பட 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களில், மாடுகளைக் கொண்டு வந்த நபர் ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், ஏனையவர்கள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, விபத்தில் 9 எருமை மாடுகள் உயிரிழந்துள்ளதுடன், நான்கு மாடுகள் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (02)

# 300 கிலோகிராம் கஞ்சா வவுனியாவில் எரிப்பு

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மேற்பார்வையின் கீழ் இன்று 300 கிலோவுக்கும் மேற்பட்ட கஞ்சா எரிக்கப்பட்டது.

கடந்த வருடம் வவுனியா மேல் நீதிமன்றத்தில் முடிவுறுத்தப்பட்ட 12 வழக்குகளில் முன்வைக்கப்பட்ட 300 கிலோவுக்கு மேற்பட்ட கஞ்சா வவுனியா ஏ - 9 வீதி சாந்தசோலை பகுதியில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மேற்பார்வையின் கீழ் நீதிமன்ற உத்தியோகத்தர்கள், நீதிமன்றப் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் எரிக்கப்பட்டது. (அ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.01.2024 இல் வெளியிடப்பெற்றது.